
aanmeegamalar.com
e-magazine
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்
திருப்பாச்சேத்தி மருநோக்கும்
பூங்குழலி உடனாய திருநோக்கிய
அழகியாநாதர் திருக்கோயில்
aanmeegamalar.com
மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்


அனைவரையும் வரவேற்கிறோம்!
அருள்மிகு மருநோக்கும் பூங்குழலி உடனாய
திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவில்
மஹா கும்பாபிஷேகம்
நாள்: 24 ஜீன் 2026
வருகை தரும் பக்தகோடிகளை அன்புடன் அழைக்கும்!!!
அருள்மிகு ஸ்ரீ சப்பாணி கருப்பண சுவாமி கோயில்
கவுண்டபுரம் வகையறா

# சங்கடங்களை தீர்த்து, திருப்பம் தரும்

# திருப்பாச்சேத்தி திருநோக்கிய அழகிய நாதர்









திருப்பாச்சேத்தல் அமைந்திருப்பது, திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவில்,இக்கோவிலின் மூலவராக திருநோக்கிய அழகியநாதர் உள்ளார். இறைவி மருநோக் கும் பூங்குழலி ஆவார். கோவிலின் தல விருட்சம் பாரிஜாதம், தல தீர்த்தமாக லட்சுமி தீர்த்தம் உள்ளது.

தல வரலாறு

1300 ஆண்டு பழமையான இந்தகோவில் நளச்சக்கரவர்த்தியால் கட்டப் பட்டு பூஜிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இத்தலம் முன்னர் 'வடுகநாதபுரம்' என்றும், துர்வாச முனிவரும், நளச்சக்கரவர்த்தியும் வழிபட்டதால் 'உன்னத புரி' என்றும் அழைக்கப்பட்டது.

திருஞான சம்பந்தர் சமணர்களுக்கு எதிராக அனல்வாதம், புனல் வாதம் செய்தார். (அனல் வாதம் என்பது ஏடுகளை நெருப்பில் போட்டு, யாருடைய ஏடு நெருப்பில் எரியாமல் இருக்கிறது என்று நிரூபிக்கும் போட்டியாகும். புனல்வாதம் என்பது ஓடும் நதியில் ஏடு களை போட்டு யாருடைய ஏடு மூழ்காமல் மிதக்கிறது என்பதை நடராஜர் திருநோக்கிய அழகிய நாதர் நிரூபிக்கும் போட்டியாகும்.)

புனல்வாதத்தின் போது திருமுறைகள் வைகை ஆற்றில் விடப்பட்டது. அப்போதுஅவை நீர் போக்கினை எதிர்த்து சேர்ந்த இடம் 'திரு ஏடகம்' என்றும், அழகிய பாக்கள் அதாவது பாடல்கள் வந்து சேர்ந்த இடம் என்பதால் 'திருப் பா சேர்த்தி' என்றும் அழைக்கப்பட்டது. பின்மருவி 'திருப்பாச்சேத்தி' என்று அழைக்கப்பட்டு, தற்போது 'திருப்பாச்சி' என்று அழைக்கப்படுகிறது.

ஜலந்திரன் என்ற அரக்கன் முனிவர் களுக்கும், தேவர்களுக்கும் மிகவும் தொந்தரவு கொடுத்து வந் தான். இதை தேவர்கள் திருமாலிடம் தெரிவித்தனர். ஜலந்திரனை அழிக்க வேண்டுமானால் அவனது மனைவி பிருந்தையின் பதிவிரதத்தை முதலில் அழிக்க வேண்டும் என்பதை திருமால் உணர்ந்தார். (பிருந்தை என்றால் துளசி என்று பொருள்). திருமாலே ஜலந்திரன் உருவெடுத்து பிருந்தையிடம் சென்றார். வந்திருப்பது திருமால் என்பதையும், தனது பதி விரதத்தை சோதிக்க அவர் வந்திருப்பதையும் அறிந்த பிருந்தை தீயில் புகுந்து உயிரை விட்டாள்.

பிருந்தை இறந்தவுடனேயே ஜலந்திரன் தன் வலி மையை இழந்தான். இதனை உணர்ந்த சிவன் பூமியில் ஒரு வட்டத்தை வரைந்து அதை ஜலந்திரனிடம் எடுக்க கூறினார். வலி மையில்லாத ஜலந்திரன் அந்த வட்டத்தை தூக்கிய போது அது மாபெரும் சக்கரமாக மாறி அவனை அழித்து விட்டது. இதன் பின் பிருந்தையின் இறப்பை எண்ணி மிகவும் வருந்திய திருமால் பிருந்தையின் சாம்பலில் கலந்தார். இதனால் வைகுண்டம் இருண்டது. திருமகள் வருந்தினாள்.

இதனை அறிந்த பார்வதி, மகாலட்சுமியிடம், "பூமியில் திருப்பாச்சேத்தி எனப்படும் உன்னதபுரியில் தங்கி, பாரிஜாத வனத்தில் சுயம்பு மூர்த்தியாக வீற்றிருக்கும் புற்றிடங்

- தொடர்ச்சி 4ம் பக்கம்





உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்
aanmeegamalar.com
விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்
e-magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்
படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

# திருப்பாச்சேத்தி மருநோக்கும் பூங்குழலி சமேத திருநோக்கிய அழகியநாதர், கஷ்ட நிவாரண பைரவர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் விழா

சிவகங்கை மாவட்டம் மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் உள்ள சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங் காவலர் டி.எஸ்.கே.மதுராந்தகி நாச்சியார் ஆளு கைக்குட்பட்ட திருப்பாச்சேத்தி மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகியநாதர் இக்கோவிலில் பிரசித்தி பெற்ற இரண்டு நாய் வாகனத்துடன் காட்சி தரும் அருள்மிகு கஷ்ட நிவாரண பைரவர் திருக் கோவில் மற்றும் விநாயகர் சுப்பிர மணியர் மற்றும் பரிவார சன்னதிகள் திருப்பணி கள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் விழா ஜூன் 24 ந்தேதி புதன் கிழமை காலை 6.50 மணியில் இருந்து 7.25 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

1300 ஆண்டுகள் பழமையான கோவில். இங்கு வந்து இறைவனை தரிசித்தால், செல்வம் பெருகும்.

திருமணத்திற்கு பின் கருத்து வேறுபாட்டால் தம்பதியர் பிரிந்திருந்தால், இங்கு வந்து அழகிய நாதரை தரிசித்தால் போதும், ஒன்று சேருவர்.

இசைக்கு அதிபதியான நடராஜர், இங்கு ஒலி



வடிவாக இசைக்கல் நடராஜராக இருக்கிறார். இன்னும் அதிக சிறப்புகளைக் கொண்ட இத்திருக்கோவிலில் உள்ள ஸ்வாமி அம்மன் பைரவர் விமானம் கோபுரம் மிகச் சிறப்பாக புதுப்பித்து திருப்பணிகள் செய்யப்பட்டு கடந்த 18 ந்தேதி மாலை சிறப்பு கணபதி ஹோமத்துடன் மகா கும்பாபிஷேகம் விழா தொடங்கியது.

சிறப்பு யாக சாலை பூஜைகளை பிள்ளையார் பட்டி ஸ்தானிகர் சிவ ஸ்ரீ பிச்சை குருக்கள், பெரிய கோட்டை சிவ ஸ்ரீ மீனாட்சி சுந்தர குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் செய்து வருகின்றனர்.

கோவில் திருப்பணி வேலைகளை மானா மதுரையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் ஸ்தபதி சண்முகம் செய்தார்.

மகா கும்பாபிஷேகம் விழா ஏற்பாடுகளை அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகியநாதர் திருக் கோவில் திருப்பணி குழுவினர், கோவில் திருவாசக குழுவினர் மற்றும் திருப்பாச்சேத்தி கிராம பொதுமக்கள் செய்து வருகின்றனர்.



# சங்கடங்களை தீர்த்து, திருப்பம் தரும் திருப்பாச்சேத்தி திருநோக்கிய அழகிய நாதர்

– 2ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டாரை சிவ தீர்த்தத்தால் வழிபட்டால் உன் கணவனை அடையலாம்" என்றார். திருமகளும் திருப்பாச்சேத்தியில் ஒரு மண்டலம் தங்கியிருந்து அப்படியே செய்ய சிவன் மகிழ்ந்து திருமகளுக்கும், திருமாலுக்கும் காட்சி தந்தார். பின் இருவரும் அருகிலுள்ள வைகை ஆற்றுக்குச் சென்று நீராடி சிவனை பூஜை செய்து வழிபட்டனர்.

சிவன் சில விதைகளை திருமாலிடம் கொடுத்து பிருந்தையின் சாம்பலில் தூவ சொன்னார். அதன் படியே செய்ய அதிலிருந்து துளசி தோன்றியது. திரு மால் அந்த துளசியை எடுத்து சிவனை அர்ச்சித்து விட்டு மீதியை மாலையாக்கி கழுத்தில் அணிந்து கொண்டார். இந்த நிகழ்வு நடைபெற்றது ஒரு சோம வார நாளில் தான். எனவே இன்றைக்கும் இந்த சிவாலயத்தில் சோமவாரமான திங்கட்கிழமை தோறும் சிவனுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படுகிறது.

## கோவில் அமைப்பு

பொதுவாக சிவன் கோவில்களில்பைரவர், ஒரு நாய் வாகனத்துடன் தான் காட்சிஅளிப்பார். ஆனால் இக் கோவிலில், பைரவர் இரண்டு நாய் வாகனங்களுடன் அருள்பாலிக்கிறார். இப்படி இரட்டை நாய் வாகனங்களுடன்பைரவர் எழுந்தருளி இருப்பது ஒரு அரிய காட்சியாகும்.

இவருக்கு 'கஷ்ட நிவாரண பைரவர்' என்று பெயர். தோல் நோய், வயிற்று நோய், வாத நோய், பித்த நோய், இருதய நோய் முதலிய நோய்களை நீக்குபவராக உள்ளதால், இவருக்கு இந்த பெயர் ஏற்பட்டது.

இக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் நடராஜர் 'இசைக் கல் நடராஜர் என்றுஅழைக்கப்படுகிறார். இவரது திருமேனியை தட்டினால், இசை ஒலி எழும்பும் என்பது தனிச் சிறப்பாகும். கோவிலில் மரகதத்தால் ஆன லிங்கமும் உள்ளது.

சிவன் கோவி லில் பெரும்பாலும் வில்வ மலர் கொண்டு அர்ச்சனை செய்யப்படும். ஆனால் இக்கோவிலில் துளசியைக் கொண்டு அர்ச்சனை செய்யப்படுவது தனிச் சிறப்பு ஆகும்.


## கோவில் சிறப்பு

திருமண வாழ்வில் கசப்புணர்வுஏற்பட்டு கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடுஏற்படின் அழகிய நாதரை வழிபட்டால் அவர்கள் வாழ்வில் துன்பம் தொலைந்து இனிமை கூடும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்து விடுவார்கள்.

அவர்களுக்குள் அன்னியத்தன்மை மறைந்து நெருக்கம் அதிகரிக்கும். அதிகரிக்கும். நளமகாராஜன் மகா இத்தல இறை வனை வழிபட்டு பிரிந்த மனைவி, குழந்தையை அடைந்தான். மகாலட்சுமியே வழிபட்ட தலம் ஆதலால் இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு திருமணம் கை கூடும். செல்வம் பெருகும். குழந்தைப்பேறு கிடைக்க வேண்டு பவர்களும், சனி தோஷம் நிவர்த்தி, கலி தோஷ நிவர்த்தி, பிரம்மகத்தி தோஷ நிவர்த்தி அடைய வேண்டுபவர்களும் இத்தலம் வந்து தரிசனம் செய்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் இங்கு இறைவனுக்கு அபிஷேகம் செய்து, தங்களால் இயன்ற பொருள் உதவி, அன்ன தானம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

மகா சிவராத்திரி, மார்கழி திருவாதிரை, சோமவாரம் உள்ளிட்ட பல விழாக்கள் இந்தக் கோவிலில் சிறப்பாக நடைபெறுகின்றன.



கோவில் தினமும் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும்

மதுரையில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் நான்கு சாலை யில் 34 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது, திருப்பாச்சேத்தி. மதுரையில் இருந்து மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம், ராமேஸ்வரம் செல்லும் பேருந்துகள் அனைத்தும் இந்த ஊரில் நிற்கும். திருப்பாச்சேத்தி பேருந்து நிலையம் அருகிலேயே இந்த கோவில் அமைந்துள்ளது.

மதுரை மத்திய பேருந்து நிலையத்திலிருந்தும்,மாட்டுத்தாவணி பஸ் நிலையத்தில் இருந்து அடிக்கடி பஸ் வசதி உள்ளது.

மதுரை ராமேஸ்வரம் பயணிகள் ரயிலும் திருப்பாச்சேத்தி ரயில் நிலையத்தில் நின்று செல்கிறது.

ஆலய தொடர்புக்கு
**8825713149, 7200088890**

# மரகத லிங்கத்தின் சிறப்பும், திருப்பாச்சேத்தியில் பிரதோஷ தினத்தில் காட்சி தரும் மரகத லிங்கம்

நவரத்தினங்களில் தனி இடம் பெற்ற மரகதம் இந்த உலகில் மிகவும் மதிப்புமிக்க ஒன்பது ரத்தினங்கள் 'நவரத்தினங்கள்' என்று போற்றப்படுகின்றன.

அவற்றில் மரகதம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. அதன் ஆழமான பச்சை நிறம், கண்ணைக் கவரும் ஒளிர்வு, அரிய தன்மை ஆகிய காரணங்களால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதர்களை ஈர்த்து வருகிறது.

ஆன்மீக உலகிலும் மரகதத்திற்கு தனிச் சிறப்பு உண்டு. அதனால் தான் மரகதலிங்கம், மரகத நடராஜர், மரகத அம்பாள் போன்ற திருமேனிகள் மிகவும் அபூர்வமானவை என்று கருதப்படுகின்றன.

மரகதம் என்றால் என்ன?

அறிவியல் ரீதியாகப் பார்த்தால், மரகதம் என்பது "பெரில்" என்ற கனிம வகையைச் சேர்ந்த ஒரு ரத்தினக்கல். இதன் பச்சை நிறத்திற்குக் கார ணம் குரோமியம் அல்லது வனேடியம் போன்ற தனிமங்கள். சிலிக்கான், அலுமினியம், பெரிலியம் போன்ற கனிமக் கூறுகளும் இதில் அடங்கியுள்ளன.

மரகதக் கல் ஒளியை பிரதிபலிக்கும் விதம் மிகவும் தனித்துவமானது. அதனால் அதனைப் பார்க்கும்போது மனதில் ஒரு வித அமைதி மற்றும் குளிர்ச்சி ஏற்படுவதாக பலர் உணர்கிறார்கள்.

ஏன் மரகத தெய்வ சிலைகள் அரியவை?

மரகதம் மிகவும் மதிப்புமிக்க ரத்தினமாக இருந்தாலும், அது மிகவும் மென்மையான கல்லாகும்.

சிறிய அழுத்தத்திற்குக் கூட உடையும் அபாயம் உள்ளது. அதனால் பெரிய அளவில் தெய்வ சிலைகள் உருவாக்குவது மிகவும் கடினமானது.

இதுவே மரகதத்தால் ஆன திருமேனிகளை அபூர்வமானதாக மாற்றுகிறது. அதனால் பல கோவில்களில் அவை தனி பாதுகாப்புடன் வைக்கப்படுகின்றன.

பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் உள்ள மரகதலிங்கம் மிகவும் புகழ்பெற்றது. தினசரி பூஜைகள் செய்யப்பட்டாலும், அது மிகுந்த பாதுகாப்புடன் பராமரிக்கப்படுகிறது. மரகதலிங்க தரிசனம் கிடைப்பது பக்தர்களால் பெரும் பாக்கியமாக கருதப்படுகிறது.

உத்திரகோசமங்கையின் மரகத நடராஜர்

தமிழகத்தின் மிகப் புகழ்பெற்ற மரகத திருமேனிகளில் ஒன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரகோசமங்கை நடராஜர்.



இந்த மரகத நடராஜர் திருமேனி வருடம் முழுவதும் சந்தனக் காப்பால் மூடப்பட்டிருக்கும்.

ஆண்டுக்கு ஒருமுறை ஆருத்ரா தரிசன நாளில் மட்டுமே அந்த சந்தனக் காப்பு அகற்றப்பட்டு பக்தர்களுக்கு முழு திருமேனி தரிசனம் வழங்கப்படுகிறது.

அந்த தரிசனத்தைப் பெற ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரளுவது வழக்கம்.

மரகதலிங்க வழிபாடு மிகவும் புனிதமானதாக கருதப்படுகிறது.

பக்தி மரபுகளில் கூறப்படுவது என்னவென்றால்:

- மன அமைதி கிடைக்கும்
- கல்வியில் முன்னேற்றம் ஏற்படும்
- பதவி உயர்வு கிடைக்கும்
- எதிர்மறை எண்ணங்கள் குறையும்
- ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும்
- குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்

என்பதாகும்.

சப்த விடங்கத் தலங்களும் மரகதலிங்கங்களும்

சோழ மன்னன் முசுகுந்த சக்கரவர்த்தியுடன் தொடர்புடைய ஐதீகக் கதைகளில், இந்திரனால் பூஜிக்கப்பட்ட மரகதலிங்கங்கள் பூமிக்கு வந்ததாக கூறப்படுகிறது.

அவற்றுடன் தொடர்புடையதாக போற்றப்படும் புகழ்பெற்ற சிவத்தலங்கள்:

- திருவாரூர்
- திருக்குவளை
- திருக்காரவாசல்
- திருவாய்மூர்
- வேதாரண்யம்
- திருநள்ளாறு
- நாகப்பட்டினம் சுற்றுவட்டாரப் புனித தலங்கள்

இத்தலங்கள் சைவ மரபில் மிகவும் சிறப்பு மிக்கவையாக கருதப்படுகின்றன.

ஆனால் ஆன்மீக சக்தி என்பது அறிவியல் அளவீடுகளால் நிரூபிக்க முடியாத ஒரு நம்பிக்கை சார்ந்த அனுபவம். அதனால் மரகதத்தின் மகிமை என்பது ஒரு புறம் அதன் இயற்கை அழகி லும், மற்றொரு புறம் ஆயிரம் ஆண்டுகளாக பக்தர்கள் வழங்கி வரும் இறைநம்பிக்கையிலும் அடங்கியுள்ளது.

இறுதியாக...

மரகதக் கல்லின் உண்மையான சக்தி அதன் விலையிலோ, பச்சை நிறத்திலோ மட்டும் இல்லை.

அதை தரிசிக்கும் பக்தனின் மனதில் எழும் இறைநம்பிக்கையிலும், பக்தியிலும், ஆன்மீக உணர்விலும் தான் அதன் உண்மையான மகிமை மறைந்திருக்கிறது. சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி சமேத திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவிலிலும் மரகத லிங்கம் பிரோதோஷ காலத்தில் பக்தர்கள் தரிசனம் செய்யலாம்






aanmeegamalar.com

# திருப்பாச்சேத்தி சிவாலயத்தில் திருப்பணிகள் செய்த சுதந்திர போராட்ட வீரர் உதயபெருமாள் கவுண்டர்





சிவகங்கை சமஸ்தானத்தில் துப்பாக்கி கவுண்டர் என்ற உதயப்பெருமாள் கவுண்டர் 18ஆம் நூற்றாண்டின்ஸ பிற்பகுதியில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக நடைபெற்ற எதிர்ப்புக் காலத்தின் இவர் முதன்மையாக சிவகங்கை பகுதியின் மிகச் சிறந்த குறிபார்த்துச் சுடும் வீரராக அறியப்பட்டார்.

உதயப்பெருமாள் கவுண்டர் தமிழ்நாட்டின் தர்மபுரி/சேலம் பகுதியில் உள்ள ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இராணுவ அனுபவத்தைப் பெறும் நோக்கில், அவர் கிழக்கிந்திய கம்பெனியின் படையில் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது; அங்கு அவர் சுமார் 15 ஆண்டுகள் பணியாற்றினார்.

இக்காலகட்டத்தில், அக்காலகட்டத்தைச் சேர்ந்த ஒரு இந்தியருக்கு அரிதாகக் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப அறிவை அவர் பெற்றார்:

சொந்த ஊர் திரும்பியதும், தனக்குப் பயிற்சி அளித்த அதே காலனித்துவ சக்திக்கு எதிராகவே தனது திறன்களைப் பயன்படுத்தினார். சிவகங்கையை ஆண்ட மருது சகோதரர்களின் (பெரிய மருது மற்றும் சின்ன மருது) தலைமையிலான கிளர்ச்சியில் அவர் இணைந்தார்.

துப்பாக்கியைக் கொண்டு மிகத் துல்லியமாக சுடும் திறன் கொண்டவராக இருந்ததால், அவருக்கு 'துப்பாக்கி கவுண்டர்' என்ற பட்டம் வழங்கப்பட்டதுடன், துப்பாக்கிப் படையின் தளபதியாகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

தென்னிந்தியக் கிளர்ச்சியின் (1800 –1801) போது துப்பாக்கி கவுண்டர் முக்கிய பங்காற்றினார்:

வரலாற்று ஆவணங்களின்படி, 1801 ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி நடைபெற்ற இறுதிக்கட்டத் தீவிரப் போரின்போது துப்பாக்கி கவுண்டர் வீரமரணம் அடைந்தார்.

கடுமையான பீரங்கித் தாக்குதலின்போது, கோவில் வாயிலைப் பாதுகாக்கும் முயற்சியில் அவர் உயிரிழந்ததாகச் சில குறிப்புகள் தெரிவிக்கிறது. அவரது வாழ்க்கை மற்றும் சிவகங்கை ராணுவத்தில் அவர் வகித்த சிறப்பான பங்கு பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது.

இவர் திருப்பாச்சேத்தி அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவிலில் பல் வேறு திருப்பணிகள் செய்து உள்ளார். இக் கோவில் வளாகத்தில் உள்ள முருகன் சன்னதியில் மருது சகோதரர்களின்அன்பைப் பெற்ற துப்பாக்கி கவுண்டர் என்ற உதய பெருமாள் கவுண்டர்க்கு தனி சிலை உள்ளது. அவருக்கு ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் குருபூஜை விழா நடைபெறும் மடாதிபதிகள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் மரியாதை செய்வார்கள். தற்போது அவரது வம்சாவலியினர் கவுண்ட புரம் வகையிறாவினர் இக் கோவிலில் உள்ள வலம்புரி விநாயகர் சன்னதி,

வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் சன்னதி திருப்பணி செய்து உள்ளனர்.






# துளசி உருவான ஸ்தலம், சிவனுக்கு துளசி அர்ச்சனை செய்யும் திருக்கோவில்

திருநோக்கிய அழகியநாதர் கோயில், தமிழ் நாட்டில் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்பாச் சேத்தி கிராமத்தில் அமைந்த சிவன் கோயிலாகும்.

பிரம்மா சிவனின் கோபத்தை அனலாகத் திரட்டி கடலுக்குள் செலுத்தினார். கடலுக்குள்புகுந்த அனல் குழந்தையாகப் பிறக்கவே, அதற்கு ஜலந்தரன் என பெயரிட்டனர். ஜலந்தரன் முனிவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தொந்தரவு கொடுத்தான்.

அவனை அழிப்பதற்கு அவனுடைய மனைவியான பிருந்தையின் பதிவிரதத்தை அழிக்கவேண்டும் என்று திருமால் அறிந்தார். அதனை அறிந்த அவள் தீயில் புகுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாள். ஜலந்திரனும் தன் வலிமையை இழந்து சிவனிடம் தோற்றான். சிவன் பூமியில் ஒரு வட்டத்தை வரைந்து ஜலந்திரனை எடுக்கக் கூறியபோது அது சக்கரமாகி அழித்தது.



பிருந்தையின் சாம்பலில் திருமால் கலந்தார். வைகுண்டம் இருண்டது. அப்போது பார்வதி,லட்சுமி யிடம் திருப்பாச்சேத்தி இறைவனை வழிபட்டால் அவ ளுடைய கணவனை அடையலாம் என்றுகூறவே திருமகளும் அவ்வாறே செய்தார். சிவன் சில விதைகளை கொடுத்து பிருந்தையில் சாம்பலில் தூவச் சொல்ல அதிலிருந்து துளசி தோன்றவே, திருமால் சிவனை அர்ச்சித்துவிட்டு மீதியை மாலையாக்கி அணிந்தார். அதனால் சோம வாரத்தில் இறைவனுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படுகிறது.

1300 ஆண்டுகள் பழமையான கோவில். இங்கு வந்து இறைவனை தரிசித்தால், செல்வம் பெருகும்.

திருமணத்திற்கு பின் கருத்து வேறுபாட்டால் தம்பதியர் பிரிந்திருந்தால், இங்கு வந்து அழகிய நாதரை தரிசித்தால் போதும், ஒன்று சேருவர்.

இசைக்கு அதிபதியான நடராஜர், இங்கு ஒலி வடிவாக இசைக்கல் நடராஜராக இருக்கிறார்.

இங்கு திங்கட்கிழமை அன்று மட்டும், சிவபெரு மானுக்கு, துளசியால் அர்ச்சனை செய்யப்படுகிறது.

துளசியை சிவபெருமான் உருவாக்கிய இடம்.

உச்சிகால பூசையின் பொழுது, இரண்டு மரகத லிங்கங்களுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

இரண்டு மரகத லிங்கங்களை ஒரே நேரத்தில் பார்ப்பது அபூர்வம்.

இத்தலம் துர்வாசமுனிவராலும் பூஜிக்கப்பட்டது இவரே நளச்சக்கரவர்த்தியிடம் இத்தலப் பெருமை யை உணர்த்தி அவனது சனிதோஷத்தை நீங் கிடச் செய்தார். அதற்கு நன்றிக்கடனாகக் கட்டப் பட்டதுதான் இங்குள்ள புண்ணீய விமானம் நளமகாராஜாவால் கட்டப்பட்ட இந்த விமானம் கலி யுகத்தில் திருப்பாச்சேத்தியில் மட்டுமே இருப்பது விசேஷம். இரண்டு மரகத லிங்கங்கள் தரிசனம்தருவது இரு நாய் வாகனத்துடன் பைரவர் அருள்வது திங்கட்கிழமைகளில் சிவனுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படுவது நளச் சக்கர்வர்த்தியால் கட்டப்பட்ட விமானத்தை உடையது.

இறையருளுடன் வளம் நிறைந்த பகுதியாக இருப்பதால் திருப்பாச்சேற்றி என்றும் லட்சுமி வழிபட்டதால் லட்சுமிபுரம் என்றும் பவளமல்லிகைக் காடாக விளங்கியதால் பாரிஜாத வனம் என்றும் நளச்சக்கிரவர்த்தி துர்வாசமுனிவர் வழிபட்டதால் உன்னதபுரி என்றும் இவ்வூருக்கு பல பெயர்கள். வயிற்று நோய் வாத நோய் இதய நோய் சரும நோய் போன்ற நோய்களை நீக்கியருள்வதால் இவர் கஷ்ட நிவாரண பைரவர் என்றே அழைக்கப்படுகிறார்

சிவாலயத்தில் நடத்தப்படும் அனைத்து உற்சவங் களும் இங்கு நடத்தப்பட்டாலும் மகாசிவராத்திரி ஆருத்ரா தரிசனம் ஆகியவை பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படுகின்றன. திங்கட்கிழமைதோறும் இந்த ஆலயத்தில் இறைவனுக்கு துளசி இலை அர்ச்சனை செய்யப்படுகிறது. திருமண வரம் வேண்டுபவர்கள், கருத்து வேறுபாட்டால் பிரிந்தவர் கள் இந்த வழிபாட்டு வேளையில் இறைவனை தரி சித்தால் சிறந்த பலனைப் பெறுவார்கள். திருமண மானபின், கணவன் மனைவியிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அழகிய நாதரை வழிபட்டால் போதும். பிரிந்தவர்கள் சேர்கிறார்கள்.

இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு திருமணம் கைகூடுகிறது. குழந்தை பாக்கியம் வேண்டு பவர்களும், சனி தோஷம் நிவர்த்தி, கலி தோஷ நிவர்த்தி, பிரம்மகத்தி தோஷ நிவர்த்தி வேண்டுபவர்களும் சிறந்த பலன் கிடைக்கும். செல்வம் பெருகும்.


ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.




24.6.2026 சிறப்பிதழ்
உங்கள் பகுதி
கோவில் கும்பாபிஷேகம், விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற சிறப்பு மலராக வெளியிட தொடர்பு கொள்ளவும்
தரமாகவும், சிறப்பாகவும் செய்து தருகிறோம்...!
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203

அருண்கேஸ் ஏஜன்ஸீஸ்









மக்கள் சேவையில் 27 ஆண்டுகள்
Bharatgas
भारत पेट्रोलियम

இலவச இணைப்பு வழங்கப்படுகிறது, பதிவு செய்தவுடன் சிலிண்டர் வழங்கப்படுகிறது,
வீட்டிற்கே நேரடியாக வந்து உடனடி இணைப்பு வழங்கும் ஒரே நிறுவனம்
தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளித்துவரும் வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் நன்றி நன்றி
1/86 பூவந்திமெயின் ரோடு, திருப்புவனம், சிவகங்கை மாவட்டம் செல் 9443274648

# திருப்பாச்சேத்தி திரு நோக்கிய அழகிய நாதர் திருக்கோவில் சிறப்புகள்

திருநள்ளாறு திருக்கோவில்தர்பா னேஸ்வரேர் மூலவராக உள்ள அக்கோ வில் தனி சன்னதியில் உள்ள சனீஸ் வரர் சிறப்பு வாய்ந்தது ஆகும் அதே போல் சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பு பழமை வாய்ந்த திருப்பாச்சேத்தி அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி சமேத திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவிலில் தனி சன்னதியில் உள்ள ஸ்ரீ கஷ்ட நிவாரண பைரவர் தனி சன்னதியில் இந்தியாவிலேய இங்கு மட்டுமே இரட்டை நாய் வாகனங்களோடு காட்சி தருகிறார்.



பக்தர்களுக்கு ஏற்படும் எத்தனை கஷ்டம் வந்தாலும் போக்கும் வல்லமை வாய்ந்த கஷ்ட நிவாரண பைரவர் இங்கு அருள் பாலிக்கிறார்.

நளச்சக்கரவர்த்தியால் கட்டப்பட்டு வழிபடப்பட்ட சிறப்பு வாய்ந்த தலமாகும் சலந்தரனின் மனைவி பிருந்தை திருமாலுக்கு இட்ட சாபத்தை நிவர்த்தி செய்ய மகாலெட்சுமி சிவபெருமானை துளசியால் அர்ச்சனை செய்து வழிபட்ட தலமாகும். இதனால் இன்றும் இத்திருக்கோவிலில் திங்கள்கிழமை தோறும் துளசியால் அர்ச்சனை செய்யப் பட்டு வருகிறது.

சிவபெருமானுக்கு துளசியால் அர்ச்சனை செய்யப்படும் ஒரே தலம் இதுவாகும். மேலும் துருவாச முனிவர் இத்திருக் கோவில் சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்ற தலமாகும்.

பிரதோஷ கால வழிபாட்டின் போது இங்கு உள்ள இரண்டு மரகத லிங்கங் களுக்கு சிறப்பு அபிஷேக ஆரா தனை நடைபெறும்.

இத்திருக்கோவிலில் இசைக்கல்லி னால் ஆன நடராஜப் பெருமான் அழகிய திருமேனியுடன் காட்சி அளிக்கிறார்.

இதுதவிர சித்திவிநாயகர், வலம்புரி விநாயகர், வள்ளி தெய்வானையுடன் முருகன் சன்னதி, துர்க்கை, பிரம்மா, சண்டிகேஸ்வரர், சண்டிகேஸ்வரி, நவகிரகங்கள், தேவியருடன் சூரியன் மற்றும் சந்திரன் தனி சன்னதிகள் உள்ளது.

ஏராளமான சிறப்புகளுடைய இத் திருக்கோவிலின் கும்பாபிஷேகம் 22 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது திருப் பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் விழா 24.6.2026 புதன் கிழமை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு

அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத திருநோக்கிய அழகிய நாதருக்கு திருகல்யாண நிகழ்ச்சி தொடர்ந்து பஞ்சமூர்த்திகள் திரு வீதி உலா நடைபெறுகிறது.


இக்கோவிலில் நடைபெறும் பிரதோஷ வழிபாடு தேய்பிறை அஷ்டமி வழிபாடு, மகா பைரவர் அஷ்டமி விழா, மற்றும் அமாவாசை பௌர்ணமி கார்த்திகை தின சிறப்பு பூஜைகள் மார்கழி முப்பது நாட்கள் சிறப்பு மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை திருவிழா போன்ற விழாக்கள் நடைபெற்றுவருகிறது.

கோவில் வளாகம் முழுவதும் சிவனுக்கு உகந்த வில்வ மரங்கள் அதிக அளவில் உள்ளது. பல்வேறு சிறப்புகள் வாய்ந்த ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகிய நாதர் திருக்கோவிலுக்கு தினந்தோறும் வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் அடியார் பெருமக்கள் வந்து மனமுருகி வழிபாடு செய்கின்றனர்.

# சகல ஐஸ்வர்யம் தரும்

## ஸ்ரீ சப்பாணி கருப்பண சுவாமி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் திருக்கோவில்





சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியில் இருந்து படமாத்தூர் சாலையில் உள்ள வணங்கும் பக்தர்களுக்கு சகல சௌபாக்கித்துடன் ஐஸ்வர்த்தை வழங்கும் அருள்மிகு ஸ்ரீ சப்பாணி கருப்பண்ணசாமி ஸ்ரீ பத்திர காளி அம்மன் திருக்கோவில் உள்ளது. மேலும் பரிவார தெய்வங்களாக

ஸ்ரீ சன்னாசி சுவாமி, ஸ்ரீ சோணைகருப்பண சுவாமி, ஸ்ரீ வீரபத்ரன் சுவாமி, ஸ்ரீ முனீஸ்வரர் சுவாமி, ஸ்ரீ பட்டதுரை சுவாமி சன்னதிகள் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோவிலில் ஆண்டு தோறும் சிவராத்திரி விழா நடைபெறும் கோவில் குடிமக்கள் ஏராள மானோர் இரவு முழுவதும் வழிபாடு செய்வார்கள். மேலும் அமாவாசை பௌர்ணமி தினத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

இக்கோவிலில் வழிபாடு செய்யும் கவுண்டபுரம் பங்காளிகளால் நடத்தப் படும் திருவிழாக்கள் சிறப்பு வாய்ந்தது ஆகும் சித்திரை மாதம் ஸ்ரீஅழகிய நாயகி அம்மன் திருக்கோவில் திருவிழா முதல் நாள் சிம்மவாகனத்தில் அம்மன் புறப்பாடு நிகழ்ச்சி அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சிக்கு செல்லும் பக்தர் களுக்காக கவுண்டபுரத்தார் மடத்தில் நீர்மோர் பந்தல் அமைத்து வழங்கும் நிகழ்ச்சி புரட்டாசி விஜயதசமி அன்று திருநோக்கிய அழகியநாதர் திருக்கோவிலில் இருந்து அம்பாள் புறப்பட்டு அம்பு விடும் நிகழ்ச்சி தை மாதத்தில் தை பூசம் அன்னதானம் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சகல ஐஸ்வர்யம் அருளும் திருக்கோவிலாக அருள்மிகு ஸ்ரீசப் பாணி கருப்பண்ணசாமி, பத்ர காளியம்மன் திருக்கோவில் உள்ளது.




aanmeegamalar.com


தென்னாட்டுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட
சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தி
அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி சமேத
திருநோக்கிய அழகிய நாதர் திருக்கோவில்
மஹா கும்பாபிஷேக விழா
காண வருகை தரும் பக்தக் கோடி பெருமக்களை
வருக வருக
என வரவேற்கிறோம்
நாள்:24.6.2026
என்றும்
இறைபணியில்
தெய்வத்திரு
க.செல்வம்
செ.சுப்பிரமணிய பாரதி
தெய்வத்திரு
தெ.செல்வபழனி
செ.தேவகாந்தன்
MSc., MPhil.,
ஸ்ரீ ராகவேந்திரா
டிஜிட்டல் ஸ்டுடியோ
99949 85551
உரிமை : மருரா.முத்துக்குமார்
9443498106
உயர்தர வீடியோ மற்றும் போட்டோகிராபி
5 நிமிடத்தில் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ
DIGITAL STUDIO
கிழக்கு பஸ்டாப்
பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
ஜெராக்ஸ் & பிரிண்ட் அவுட்
பான் கார்டு விண்ணப்பம்
ஆதார் திருத்தம்
மின் கட்டணம் செலுத்துதல்
வாக்காளர் அடையாள அட்டை
ஸ்ரீ இராமகிருஷ்ணா டிஜிட்டல் ஸ்டுடியோ & ஜெராக்ஸ்
இசேவை மையம்
உரிமை: மருஇரா.செந்தில்வேல்
செல்: 9487167194
மேற்கு பஸ்டாப் திருப்பாச்சேத்தி
ASA ஜவுளி ஸ்டோர் & பேன்சி ஸ்டோர்
முத்துககுமரன் ஏஜென்ஸி
ராம்கோ சிமெண்ட் டீலர்
உரிமையாளர் : ASA முத்துக்குமார்
RAMCO CEMENTS DEALER
99949 85551
அனைவரும் வருக! இறைவன் அருள் பெறுக!


aanmeegamalar.com